**O.S No. 35 /2013 20.12.2022 DW 1 - . ஆறுமுகம், த/பெ.ராமர்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**1.** பெத்தனன்மூப்பர் மகன் மதியாபுலி என்பவர் அவருடைய தகப்பனார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் கடந்த 05.03.2002ல் வழக்கின் வாதி முத்தையனுக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் பே.வீரன் மனைக்கு தெற்கு சங்கரமூப்பர், சுப்பம்மாள், சங்கரம்மாள் இவர்கள் மனைக்கு மேற்கு கிழமேல் பொது சந்திற்கு வடக்கு தென்வடல் வீதிக்கு கிழக்கு இந்த நான்கு மாலுக்குள் கிழமேலடி 24, தென்வடலடி 24 என காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. தாவா சொத்து ஒரே வீட்டடியாக இருந்தது என்றால் சரிதான். கடந்த 04.02.2013ல் எனக்கு பால்ராஜ், அவருடைய சகோதரர் மதியாபுலி, கொப்பையமூப்பர் மகன் வீரபத்திரன் ஆகியோர்கள் சேர்ந்து எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. பால்ராஜ், அவருடைய சகோதரர் மதியாபுலி, கொப்பையமூப்பர் மகன் வீரபத்திரன் ஆகியோர்கள் எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு அந்த சொத்து அவர்களுக்கு பாத்தியம் என்பதை காண்பிப்பதற்கான ஆவணங்கள் எதையும் காண்பித்தார்களா என்றால் எனக்கு தெரியாது, எனது சித்தப்பாவிற்கு தான் தெரியும். நான் கிரையம் வாங்கும்போது அந்த சொத்து 24 அடி நீளம், 24 அடி அகலத்தில் ஒரே சொத்தாகதான் இருந்தது என்றால் சரிதான். வீரபத்திரனுக்கு தாவா சொத்தை எனக்கு எழுதிக்கொடுப்பதற்கு அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, அவருக்கு உரிமை இருந்தது. பால்ராஜ், அவருடைய சகோதரர் மதியாபுலி, கொப்பையமூப்பர் மகன் வீரபத்திரன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கான முந்தைய கிரையபத்திரங்களோ, பட்டாவோ வழக்கில் த்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்து பால்ராஜ், அவருடைய சகோதரர் மதியாபுலி, கொப்பையமூப்பர் மகன் வீரபத்திரன் ஆகியோர்களுக்கு பாத்தியம் இல்லாத காரணத்தினால் தான் அவர்கள் பெயரில் உள்ள ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. பிவாசாஆ.2 ஆக பெத்தனன் மகன் மதியாபுலி, மகாலிங்கமமூப்பர் மகன் தங்கமலை ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கிய பத்திரத்தை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரிதான். மகாலிங்கம்மூப்பர் என்பவருக்கு பாண்டி, பாலு, தங்கமலை ஆகிய மூன்று மகன்கள் என்றால் சரிதான். அதில் பாண்டி மற்றும் பாலு ஆகியோர்கள் மேற்படி கிரைய பத்திரத்தில் தரப்பினராக இருந்து கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ,2 ஆவணத்தில் வாதிக்கு கிரையம் கொடுத்த பெத்தனன் மகன் மதியாபுலி என்பவரும் சேர்ந்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பெத்தனன் மகன் மதியாபுலி என்பவர் கடந்த 2002ம் ஆண்டு வழக்கின் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு மேற்படி விபரங்களை மறைத்து எனக்கு கிரையம் கொடுத்ததால் மேற்படி கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பெத்தனன் மகன் மதியாபுலி என்பவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் 24 x 24 என கூறிவிட்டு இந்த கிரையபத்திரத்தில் 8 x 23 என கூறியது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பெத்தனன்மூப்பர் என்பவருக்கு ராமன், மதியாபுலி மற்றும் ராமக்கால் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து பெத்தனன்மூப்பர் சொத்து என்றால் சரியல்ல, அண்ணன் தம்பி மூவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். பெத்தனன்மூப்பர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்தை பெத்தனன்மூப்பர் மகள் ராமக்காள் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ராமக்காளுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் சொத்தை பொறுத்து பெத்தனன்மூப்பர் என்பவரின் சகோதரர்களான ராமன்மூப்பர் என்பவருக்கோ, மகாலிங்கம்மூப்பர் என்பவருக்கோ யாதொரு பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. ராமன்மூப்பரும், மகாலிங்கம் மூப்பரும் அவர்களுடைய பாக சொத்தை பெரியமொக்கையன் என்பவருக்கு கிரையம் கொடுத்து தற்போது அவரது மகன்களான கருப்பையா, சின்னகருப்பன் ஆகியோர் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தை பொறுத்து உரிமை இல்லாத ராமன்மூப்பர் மகன் பால்ராஜ், மதியாபுலி, மகாலிங்கம்மூப்பர் மகன் தங்கமலை ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கியது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ.1,2 கிரைய பத்திரங்களின் அடிப்படையில் எந்த காலத்திலும் ராமன் மூப்பர், மகாலிங்கம்மூப்பர் ஆகியோர் அனுபவம் செய்யவில்லை என்றும் நான் தவறுதலாக மேற்படி சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான்

பிவாசாஆ.1,2 அடிப்படையில் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ.1,2 அடிப்படையில் கிரையம் பெற்ற நபர்களுக்கு உரிமை இல்லாததால் தான் நான் கிரையத்தின் அடிப்படையில் தனி பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. தவறான கிரையபத்திரத்தை ஏற்படுத்தி வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

S.d./ Arumugam

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.